# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2015

| தரம் : 07 | வரலாறு<br>பெயர் / சுட்டெண் : ...................................................... | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

**01 - 20 வரையான வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. நாகரிகங்கள் நதிக்கரைகளில் தோன்றுவதற்கான விசேட காரணங்களாக அமைவன
    1) வளமான மண், நீர்
    2) வேலை வாய்ப்பு, வர்த்தகம்
    3) சுகாதாரம், குடிநீர்
    4) கால்நடை வளர்ப்பு, மண்

02. சில்லின் உபயோகத்தை முதன்முதலில் பயன்படுத்திய நாகரிகம்
    1) மொசபத்தேமியா 2) இந்தியா 3) எகிப்து 4) சீனா

03. சிந்து நதிக் கழிமுகத்தில் காணப்பட்ட வர்த்தகத் துறைமுக நகரம்
    1) சிஷ்லாகாஸ் 2) மொகஞ்சதாரோ 3) ஹரப்பா 4) லோத்தல்

04. உரோமானிய வழிபாட்டு முறையில் நல்ல விளைச்சலுக்கு அதிபதியான தெய்வம்
    1) செரஸ் 2) மார்ஸ் 3) மினர்வா 4) வீனஸ்

05. எழுதுவதற்குரிய ஏடுகளாக ஆமை ஓடுகளைப் பயன்படுத்தியவர்கள்
    1) சீனர் 2) எகிப்தியர் 3) இந்தியர் 4) மொசபத்தேமியர்

06. A - மிக நீண்ட காலம் தலைநகராக விளங்கியமை.
    B - பொருளாதாரம் நிலை குலைந்தமை.
    C - பொலநறுவை நகர் வளர்ச்சியுறத் தொடங்கியமை.
    D - பிற்காலத்தில் பலவீனமான மன்னர்கள் ஆட்சிப்பீடம் ஏறியமை.
    இக் கூற்றுக்களில் அநுராதபுர இராச்சியத்தின் வீழ்ச்சிக்குரிய காரணங்களாக அமைவன.
    1) Aயும் Bயும் 2) Bயும் Dயும் 3) Bயும் Cயும் 4) Aயும் Dயும்

07. இலங்கை மீது தென்னிந்திய அரசுகள் ஆதிக்கம் செலுத்தியமைக்கான முக்கிய காரணி
    1) இலங்கை தென்னிந்தியாவிற்கருகாமையில் அமைந்திருந்தமை.
    2) தென்னிந்திய அரசுகள் பல இருந்தமை.
    3) இருநாடுகளுக்கிடையில் வர்த்தக கலாசார உறவுகள் இருந்தமை.
    4) இலங்கை பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெற்றமை.

08. தென்னிந்தியாவில் சோழப் பேரரசு எழுச்சி பெறக் காரணமான மன்னன்
    1) இராஜேந்திர சோழன்
    2) ஸ்ரீமாற ஸ்ரீபல்லபன்
    3) பராந்தக சோழன்
    4) பப்பதேவ

09. இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றி சோழரின் ஆட்சிக்குட்படுத்திய மன்னன்
    1) கரிகாலச் சோழன்
    2) இராஜேந்திர சோழன்
    3) இராஜராஜ சோழன்
    4) குலோத்துங்க சோழன்



kalvi.lk

10. பாண்டியப் பேரரசு தென்னிந்தியா முழுவதும் பரவக் காரணமான மன்னன்
   1) ஸ்ரீமாற ஸ்ரீ பல்லபன்   2) பப்பதேவ்
   3) பராந்தகன்   4) வங்க நாஸிக மன்னன்

11. பொலனறுவையை சோழர்களிடமிருந்து மீட்ட சிங்கள மன்னன்
   1) மகா பராக்கிரமபாகு   2) நிஸங்கமல்லன்
   3) முதலாம் விஜயபாகு   4) கஜபாகு

12. இலங்கையின் மிகப் பெரிய கல்பொத்த கல்வெட்டினை நிறுவிய மன்னன்
   1) முதலாம் விஜயபாகு 2) நிஸங்கமல்லன் 3) காசியப்பன் 4) பராக்கிரமபாகு

13. வலகம்பா மன்னன் காலத்தில் இடம்பெறாத நிகழ்வு
   1) பூலகத்த உட்பட ஏழு தமிழர்களின் ஆக்கிரமிப்பு.
   2) அரசி சோமா தேவியை தென்னிந்தியாவுக்குக் கொண்டு சென்றமை.
   3) புனித பாத்திரத்தை தென்னிந்தியாவுக்குக் கொண்டு சென்றமை.
   4) சேனன் குத்திகன் எனும் குதிரை வியாபாரிகளின் ஆக்கிரமிப்பு.

14. ராஜ குல வந்தன என்னும் பிரிவெனாவை அமைத்து அதற்கு நிலபுலங்களை வழங்கிய பொலனறுவைக் கால இளவரசி
   1) லீலாவதி ராணி   2) கல்யாணவதி ராணி
   3) சுகலாதேவி   4) மித்தா இளவரசி

15. தமிழ்தேவி என்னும் தென்னிந்திய இளவரசியைத் திருமணம் புரிந்த அனுராதபுர கால இளவரசன்
   1) சந்தமுகசிவ 2) நான்காம் மஹிந்த 3) கஜபாகு 4) எல்லாளன்

16. கஜபாகு மன்னனின் மரணத்தின் பின்னர் பராக்கிரமபாகு மன்னனிற்கு ஆட்சி உரித்தானது எனக் குறிப்பிடும் கல்வெட்டு
   1) கல்பொத்த கல்வெட்டு   2) சங்கமுக கல்வெட்டு
   3) கட்டுஹல்கே கல்வெட்டு   4) திருமுக்கூடற் கல்வெட்டு

17. வானிலிருந்து விழும் ஒரு துளி நீரேனும் வீணே கடலைச் சென்றடைய விடமாட்டேன் எனக் கூறிய மன்னன்
   1) மகா பராக்கிரமபாகு   2) நிஸங்கமல்லன்
   3) கஜபாகு   4) முதலாம் விஜயபாகு

18. முதலாம் விஜயபாகுவினால் அமைக்கப்பட்ட வாவி
   1) தோப்ப வாவி   2) புதுகுண வாவி
   3) நாச்சதுவ வாவி   4) மஹா கல்கடவல வாவி

19. பராக்கிரமபாகு மன்னன் பற்றிய தவறான கூற்று
   1) இராஜரட்டைக்கு அரசனாவதை இலட்சியமாகக் கொண்டிருந்தமை.
   2) தக்கினதேசத்தின் ஆட்சி அதிகாரத்தை நிலை நாட்டியிருந்தமை.
   3) இலங்கையில் முதல்முறையாக கடற்காவல் அரண்களை நிறுவியமை.
   4) சதுப்பு நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றியமை.

20. இலங்கையில் பல்வகைப்பட்ட மக்கட் பிரிவினரின் அன்யோன்யமான தேசிய கலாசார மொன்றுக்கு உரித்தான இராஜதானி
   1) அனுராதபுரம் 2) தக்கிணதேசம் 3) பொலனறுவை 4) உருகுணை

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

**முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட, ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. இலங்கைப்படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

மல்வத்து ஓயா, அனுராதபுரம், ஜனநாதபுரம், மகியங்கணை, தக்கிண தேசம், மகாநாககுல, மகாதித்த, கதிர்காமம், ரோஹணப் பிரதேசம், மகாகம, வளவங்கை, மகாவலிகங்கை

(12 x 1 = 12 புள்ளிகள்)

02. வகுப்பறையில் கணிப்பீட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் உயர் தேர்ச்சி மட்டத்தைப் பெறமுடியும்.

1) நீர் இரண்டாம் தவணையில் மேற்கொண்ட கணிப்பீடுகள் இரண்டு தருக.
2) இக்கணிப்பீடுகளை மேற்கொண்ட பாட அலகுகள் எவை?
3) நீர் கணிப்பீட்டுச் செயற்பாட்டில் ஈடுபட்டமையால் பெற்ற நன்மைகள் மூன்று தருக.

(4 x 3 = 12 புள்ளிகள்)

03. உலகில் தோன்றிய நாகரிகங்கள் அனைத்தும் நதிகளை அடிப்படையாகக் கொண்டே தோற்றம் பெற்றன.

1) நாகரிகங்கள் நதிக்கரைகளில் தோன்றுவதற்கான காரணங்கள் மூன்று தருக.
2) உலகின் புராதன நதிக்கரை நாகரிகங்களின் பெயரையும், அவை தோன்றிய நதிகளையும் முறையே குறிப்பிடுக.
3) மொசபத்தேமிய, எகிப்திய நாகரிக எழுத்துக்கலையின் சிறப்புக்கள் எவை?
4) இந்து நதி நாகரிகம் மற்றைய நாகரிகங்களை விட வளர்ச்சி பெற்றமைக்கான சான்றுகள் மூன்று தருக.

(4 x 3 = 12 புள்ளிகள்)

04. உலகில் வளர்ச்சி பெற்ற நாகரிகங்களுக்குரியதான பல பண்புகள் ஏனைய உலகநாடுகளின் வளர்ச்சிக்கு உதவியுள்ளன.

1) அ)) கிரேக்க நகர அரசுகளின் பெயர்கள் இரண்டு தருக.
   ஆ) நகர அரசுகளின் பண்புகள் எவை?
2) கிரேக்க தத்துவஞானிகள் மூவரைக் குறிப்பிட்டு அவர்களின் சிறப்புகள் பற்றி குறிப்பிடுக.
3) உரோமர்களால் உலகிற்குக் கிடைத்த அரும்கொடைகள் எவை?
4) உரோம சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கான காரணிகள் மூன்று தருக.

(4 x 3 = 12 புள்ளிகள்)

05. கடதாசிப் பாவனை அரேபியர் ஊடாக ஐரோப்பாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் பரவியது.

1) பதினாறு பெருங் குடியேற்றங்களில் மூன்றின் பெயரைத் தருக.
2) இந்தியாவில் நிலவிய சமூக அமைப்பு பற்றி இரண்டு காரணியின் அடிப்படையில் விளக்குக.
3) அரேபிய மருத்துவ விஞ்ஞானத்தினால் உலகிற்குக் கிடைத்த நன்மைகள் மூன்று தருக.
4) அரேபியர்களின் கைத்தொழில் உற்பத்திப் பொருள் நான்கு தருக.

(4 x 3 = 12 புள்ளிகள்)



kalvi.lk

06. தென்னிந்தியப் படை எடுப்புகளினால் அனுராதபுர இராச்சியம் வீழ்ச்சி அடைந்தது.

கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து சரியான விடையைத் தெரிந்து எழுதுக.

**(மும்முடிச் சோழ மண்டலம், தஞ்சாவூர், பத்தினித்தெய்வம், அவுக்கணசிலை)**

1) அ) சோழப் பேரரசின் தலைநகர்?

ஆ) சோழர்களின் நிர்வாகத்திற்குட்பட்ட இலங்கையின் வட பகுதி?

இ) இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் ஆக்கம்

2) தென்னிந்திய அரசர்கள் இலங்கை அரசர்களிடம் உதவி கோரிய சந்தர்ப்பங்கள் மூன்று தருக.

3) இலங்கை மீது மேற்கொண்ட தென்னிந்திய படையெடுப்புகளின் தன்மைகள் மூன்று தருக.

4) அனுராதபுர காலத்தில் தென்னிந்திய படையெடுப்பாளர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆட்சிப்பீடம் ஏறியுள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பங்கள் மூன்று தருக.

(4 x 3 = 12 புள்ளிகள்)

07. பொலனறுவைக் காலம் இலங்கை வரலாற்றில் முக்கியமானதொரு யுகமாகும்.

1) பொலனறுவைக்கு வழங்கிய மறுபெயர்கள் மூன்று தருக.

2) முதலாம் விஜயபாகு ராஜரட்டையை வெற்றிகொள்ள எடுத்த நடவடிக்கைகள் 3 தருக.

3) பராக்கிரமபாகுவின் பொருளாதார சேவைகள் 3 தருக.


4) அ) பொலனறுவைக் கால பெண் அரசிகள் மூவரைக் குறிப்பிட்டு, அவர்களில் ஒருவர் ஆற்றிய சேவைகள் இரண்டு தருக.

ஆ) பொலனறுவை வீழ்ச்சிக்கான காரணங்கள் இரண்டு தருக.

(4 x 3 = 12 புள்ளிகள்)



kalvi.lk



kalvi.lk


தரம் 01 - 10
3ம் தவணை
REVISION | PAPER DISCUSSION
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..
கட்டண விபரங்கள்
ஆரம்பம் - 01.12.2024
மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.
JOIN NOW
தமிழ் Medium
தரம் 01-02 2000/=
தரம் 03-05 2500/=
தரம் 06-10 3000/=
English Medium
தரம் 06-07 3500/=
Education கல்வி අධ්‍යාපන
KALVI.LK
WHATSAPP
075 287 1457